# இடமாற்றக்கொள்கை

சுகாதார அமைச்சு
வடமாகாணம்.
03.03.2021

செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வட மாகாணம்
உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்.
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட மாகாணம்
உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்.

**வட மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் பொதுச் சுகாதார பரிசோதகர் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை**

1817/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதிக் கோவை அத்தியாயம் XVIII இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 25/91 என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் இடமாற்ற கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் இடமாற்ற கொள்கை வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் சிபார்சிற்கமைவாக வட மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதி பெறப்பட்டு, வடமாகாண சுகாதார அமைச்சினால் வெளியிடப்படுகின்றது. வடமாகாணத்தில் பொது சுகாதார சேவைகள் வினைத்திறன் மிக்கதாக முன்னேற ஏதுவாகவும் வடமாகாண பொது சுகாதார பரிசோதகர்களின் வினைத்திறனான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் இவ் இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பா.செந்தில்நந்தனன்
செயலாளர்
சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை

01. இடமாற்றக் கொள்கையின் அடிப்படை விடயங்கள்

வடமாகாண பொது சுகாதார பரிசோதகர்களின் வருடாந்த இடமாற்றக் கொள்கையானது கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1.1. இடமாற்றம் வழங்கும் போது வடமாகாண பொது சுகாதார சேவையின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை வழங்குதல்

1.2. வடமாகாணத்தில் பொது சுகாதார சேவைகளை நிலையாகப் பேணுவதற்கு ஏதுவாக இவ் அலுவலர்களின் அறிவு, திறன், நேர்மனப்பாங்கு என்பவற்றின் விருத்திக்கான சந்தர்ப்பம் சேவையை பாதிக்காதவாறு வழங்குதல்

1.3 வடமாகாண பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆளணியினை பிரதேச ரீதியில் தேவைக்கேற்ப சீராக பரவலாக்கி வடமாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் மக்கள் சுகாதார சேவையின் உச்ச பயனை பெறுவதனை உறுதி செய்தல்.

1.4 வடமாகாணத்தின் சுகாதார சேவை முகாமைத்துவம் உயர் செயற்திறனை அடைவதனூடாக சேவைகள் தடையின்றி வழங்கப்படுவதனை உறுதிசெய்தல்.

1.5 அலுவலர் ஒருவர் ஒரே இடத்தில் தொடர்ந்து கடமையாற்றுவதன் காரணமாக எழக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்தல்.

பா.செந்தில்நந்தனன்
செயலாளர்
சுகாதாரம், சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை
சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
வடக்கு மாகாணம்

**02.** இடமாற்ற சபை, இடமாற்ற மீளாய்வு சபை அமைத்தல்

வருடாந்தம், வட மாகாண சுகாதார அமைச்சினால் வருடாந்த இடமாற்றச் சபை மற்றும் வருடாந்த மேன்முறையீட்டு சபை ஆகிய இவ்விரு சபைகளும் அமைக்கப்படும்.

2.1 இடமாற்ற சபையின் கட்டமைப்பு

வடமாகாண பொது சுகாதாரப் பரிசோதகர்களின் வருடாந்த இடமாற்ற சபையின் கட்டமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

I. வட மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்.
II. வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்.
III. வடமாகாண பொது சுகாதார பரிசோதகர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர், (ஆகக்குறைந்தது 15% பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.)

2.2 மீளாய்வுச் சபை கட்டமைப்பு

வடமாகாண பொது சுகாதார பரிசோதகர்களின் வருடாந்த இடமாற்ற மீளாய்வுச் சபை ஒன்றின் கட்டமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

I. செயலாளர் , சுகாதார அமைச்சு, வட மாகாணம்
II. உள்ளூராட்சி ஆணையாளர் , உள்ளூராட்சி திணைக்களம், வட மாகாணம்
III. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர்

2.3 இடமாற்ற சபையின் கடமைகள்

வடமாகாண பொது சுகாதாரப் பரிசோதகர்களின் வருடாந்த இடமாற்ற சபையினது கடமைகள் பின்வருமாறு.

ஒவ்வொரு இடமாற்ற சபையும் வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை அத்தியாயம் XVIII இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கும் இடமாற்றக்கொள்கைக்கும் அமைவாக இவ் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து இடமாற்றங்கள் தொடர்பான தங்கள் சிபாரிசுகளை பட்டியல் தயாரித்து செப்டம்பர் 10 இற்கு முன்னர் வட மாகாண சுகாதார அமைச்சிற்கு வழங்கவேண்டும்.

2.4 மீளாய்வு சபையின் கடமைகள்

வட மாகாண பொது சுகாதாரப் பரிசோதகர்களின் வருடாந்த இடமாற்ற மீளாய்வுச் சபையின் கடமைகள் பின்வருமாறு.

I. வருடாந்த இடமாற்ற மீளாய்வுக்குழுவானது இடமாற்றப்பட்ட அலுவலர்களால் முன்வைக்கப்படும் மேன் முறையீடுகளைப் பரிசீலித்து அதன் விதப்புரைகள் மற்றும் அதற்கான நியாயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையை ஒக்ரோபர் 10 ம் திகதிக்கு முன் அமைச்சிற்கு வழங்க வேண்டும்,
II. இடமாற்ற மீளாய்வுக்குழு அதன் விதப்புரைகளைச் செய்கையில் வருடாந்த இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக மேற்கொள்ளல் வேண்டும்.
III. இடமாற்றக் கொள்கைக்கு முரணான இடமாற்றங்கள் தொடர்பில் பரிசீலனை செய்தல்.
IV. இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்ட திகதிக்கு பின்னர் அலுவலருக்கு நேர்ந்த எதிர்பாராத இடர்கள், சுகயீனங்கள் போன்றவை தொடர்பான ஏற்றுக்கொள்ளத்தக்க கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலனை செய்தல்.

03. மேன்முறையீடுகள்

இடமாற்றக் கட்டளை கிடைக்கப் பெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது மீளாய்வுக் கோரிக்கையினை இடமாற்ற மீளாய்வு சபைக்கு சமர்ப்பித்து முடிவுகளை பெற்றுக்கொண்ட பின்னர், கிடைத்த முடிவில் திருப்தியுறாதவிடத்து, இருவார காலப்பகுதியினுள் முதலில் வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் தனது மேன்முறையீட்டுக் கோரிக்கையினை சமர்ப்பித்து பதில் ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியும்.

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து மேன்முறையீட்டுக் கோரிக்கைக்கான பதில் கிடைக்கப் பெற்ற பின்னர் திருப்தியுறாதவிடத்து இரு வாரகாலப்பகுதியினுள் வடமாகாண கௌரவ ஆளுநரிடம் தமது இறுதி மேன்முறையீட்டுக் கோரிக்கையினை சமர்ப்பித்து இறுதித் தீர்வினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**04.** அலுவலர்கள் தொடர்பான விடயங்கள்

வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படும் அலுவலர்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளத்தக்க நிபந்தனைகள் பின்வருமாறு.

4.1 வட மாகாண சுகாதார திணைக்களத்தில் கீழ் கடமையாற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான அனைத்து நடைமுறைகளும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் உள்ள பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் பொருத்தமானதாகும்.

4.2 சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களும் முதல் 05 வருட காலச் சேவையை கட்டாயமாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குற்பட்ட சேவை நிலையம் ஒன்றில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.3 குறிப்பட்ட ஒரு சேவை நிலையத்தில் விண்ணப்பம் கோரப்பட்ட திகதியில் 05 வருடங்களிற்கு மேல் தொடர்ச்சியாக கடமையாற்றி இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மற்றொரு சேவை நிலையத்திற்கு இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படலாம்.

4.4 குறித்த ஒரு சுகாதார சேவை திணைக்களத்திற்கு உட்பட்ட சேவை நிலையம் அல்லது உள்ளூராட்சி மன்றம் ஒன்றிற்குட்பட்ட சேவை நிலையத்தில் 05 வருடத்திற்கு அதிகமாக சேவை புரிவோர் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவர்.

4.5 வட மாகாணத்தில் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் 10 வருடங்கள் கடமையாற்றியோர் வடமாகாணத்திலுள்ள பிற மாவட்டமொன்றுக்கு சுகாதார சேவையின் தேவை கருதி இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படலாம்.

4.6 மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் தொடர்பாக அரசாங்க நிர்வாக சுற்றிக்கை 25/91 இற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.6.1 வட மாகாணத்திலிருந்து பிற மாகாணங்களிற்கு அல்லது மத்திய சுகாதார அமைச்சின் கீழுள்ள சேவை நிலையம் ஒன்றிற்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறைந்தது 03 வருடகால சேவையை வட மாகாணத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.7 உத்தியோகத்தர் குறித்த சேவை நிலையம் ஒன்றில் சேவையாற்றிய காலத்தை கணக்கெடுக்கும்போது அலுவலரின் சம்பளமற்ற விடுமுறைக்காலம் கணக்கெடுக்கப்படமாட்டாது.

4.8. மனங்கவரும் ஒரு சேவை நிலையத்தில் 02 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத ஒரு அலுவலர் இடமாற்றம் ஒன்றைக் கோரியிருப்பின் திணைக்களத்தின் சேவைகள் பாதிக்காத வகையில் இடமாற்றம் வழங்கப்படலாம்.

4.9. மனங்கவரும் சேவை நிலையங்கள் மற்றும் மனங்கவராத சேவை நிலையங்கள் என இனம்காணப்பட்ட சேவை நிலையங்கள் ஆண்டு தோறும் அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

4.9.1 மனங்கவராத சேவை நிலையமொன்றில் சேவையாற்றும் அலுவலர் ஒருவரின் மனங்கவரும் சேவை நிலையமொன்றிற்கான இடமாற்றக் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

4.9.2 மனங்கவரும் சேவை நிலையமொன்றில் சேவையாற்றும் அலுவலர் ஒருவரிற்கு மற்றொரு மனங்கவரும் சேவை நிலையமொன்றிற்கான இடமாற்றக் கோரிக்கைக்கு முன்னுரிமை வழங்கப்படலாகாது.

4.9..3 பின்வரும் காரணிகளின் அடிப்படையில் இடமாற்ற நடவடிக்கை வருடாந்த இடமாற்றத்தில் உள்ளடக்கப்படமாட்டாது.

i. சேவையின் தேவையின் அடிப்படையிலான இடமாற்றம்
ii. பரஸ்பர இடமாற்றம்
iii. நியமிக்கப்பட்ட மருத்துவசபையின் விதப்புரையின் மீதான இடமாற்றம்
iv. ஒழுக்காற்று இடமாற்றம்

## 05. இடமாற்றங்களுக்காக அலுவலர்களின் அடிப்படைத் தகைமைகள் என்பவற்றை தீர்மானிக்குமிடத்து கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயங்கள்

5.1 திணைக்களத்தின் தேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அலுவலரொருவரின் பின்வரும் தனிப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து முன்னுரிமையளிக்கப்படலாம்.

5.1.1 கணவன், மனைவி ஆகிய இருவரும் அரச சேவை புரிபவர்களாயின் ஒரே பிரதேசத்தில் பணிபுரிவதற்கு வசதியளித்தல்.

5.1.2 பாடசாலை செல்லும் பிள்ளைகள் உள்ள அலுவலராயின் பெற்றோர்கள் பிள்ளைகளது கல்வி செயற்பாடுகளை கவனிக்கத்தக்க வகையில் வசதியளித்தல்.

5.1.3 குழந்தையின்மைக்காக மருத்துவ சிகிச்சை பெற்று வரும் தம்பதிகள் இருவரில், ஒருவராகவேனும் இருப்பதனை கருத்திற் கொள்வதுடன் இருவரும் ஒரே பிரதேசத்தில் சேர்ந்து வாழத்தக்க வகையில் வசதியளித்தல்.

5.1.4 அலுவலர் விசேட தேவையுடைய பிள்ளையினை உடையவராயின் பிள்ளையினது தேவைகளை கவனிக்கத்தக்க வகையில் வசதியளித்தல்.

5.1.5 நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ள வாழ்க்கைத்துணையை கொண்ட அலுவலராயின் வாழ்க்கைத் துணையினது தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில் வசதியளித்தல்.

5.1.6 கணவன்/ மனைவி முப்படை அல்லது பொலிஸ் சேவையை சார்ந்தவர்களாயின் அவர்களது இடமாற்ற விண்ணப்பம் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படலாம்.

5.1.7 ஏனைய ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இருப்பின் நிரூபிக்கக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து அவற்றைக் கருத்திற் கொண்டு முன்னுரிமை வழங்கப்படலாம்.

5.2 அலுவலரின் வேண்டுகோள் அல்லது வேறு விசேட தேவைகள் இருந்தாலொழிய, 55 வயதினைக் கடந்த அலுவலர்களை மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்தலாகாது. எனினும் அவர்கள் திணைக்களத்தின் தேவை கருதி மாவட்டத்திற்குள் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படலாம். 59 வயதினைக் கடந்துள்ள அலுவலர்களுக்கு அவர்களால் இடமாற்றம் கோராதவிடத்து மாவட்டத்தினுள்ளேனும் இடமாற்றம் செய்தலாகாது.

5.3 தனது சேவையில் மூன்று வருட காலத்தை பூர்த்தி செய்திருப்பதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராக / உறுதிப்படுத்துவதற்கு தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.

5.4 வருடாந்த இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் பரஸ்பர இடமாற்ற விண்ணப்பங்கள் அடுத்துவரும் ஒரு வருடத்திற்கு விசேட காரணங்களின்றி அனுமதிக்கப்படமாட்டாது.

5.5 வருடாந்த இடமாற்ற விண்ணப்பம், இடமாற்ற மேன்முறையீட்டு விண்ணப்பம் என்பவற்றை சமர்ப்பிக்கும் போது வடமாகாண சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**06. பிற விடயங்கள்**

6.1 வட மாகாண பொது சுகாதார பரிசோதகர்களது வருடாந்த இடமாற்றக்கொள்கை வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து வலுப்பெறும்.

6.2 உத்தியோகத்தர் ஒருவர் கடமையை பொறுப்பேற்ற திகதியிலிருந்து 12 மாத காலம் கடமையை பூர்த்தி செய்த திகதியே அவர்களது 01வருட சேவைக்காலமாக கொள்ளப்படும்.

6.3 யூன் 30 ஆம் திகதிக்கு பின்னர் பரஸ்பர இடமாற்றக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6.4 ஒவ்வொரு அலுவலர் பற்றிய சரியான பூரணமான தகவல்களைத் நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். பொய்யான பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக சம்மந்தப்பட்ட நிறுவனத்தலைவர்கள் மற்றும் இப்பட்டியல்களைத் தயார் செய்து செவ்வை பார்த்த உத்தியோகத்தர்கள் பொறுப்பாக்கப்படுவதுடன் அவர்கள் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

6.5 சேவையின் அவசிய தேவை கருதி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உள்ளக இடமாற்றங்கள் அதாவது சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளுக்கிடையிலான இடமாற்றங்களும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் காணப்படும் சேவைநிலையங்களின் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளிற்கிடையிலான இடமாற்றங்களும் இடமாற்றமாக கருதமுடியாது.

07. இடமாற்றக் கட்டளையை அமுல்படுத்தல்

7. 1 இடமாற்றக் கட்டளை பெற்றுள்ள அலுவலரின் கடமைகள்

7.1.1 முன்னைய சேவை நிலையத்திலிருந்து விடுவிப்பு பெற்றதும் தனது புதிய நிலையத்தில் கடமைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

7.1.2 தனது பொறுப்பிலுள்ள பொருட்களை முறைப்படி கையளிப்பதற்கு தனது மேலதிகாரியுடன் கலந்துரையாடி, ஏற்ற ஒழுங்குகளைச் செய்துகொள்ள வேண்டியது அவரது பொறுப்பாகும்.

7.2 திணைக்களத் தலைவரின் கடமைகள்

7.2.1 இடமாற்றக் கொள்கையை பின்பற்றாதோர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

7.2.2 அலுவலர் ஒருவர் எக்காரணத்தினாலேனும் தனது முன்னைய நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டும் தனது புதிய நிலையத்திற்கு வருகை தராமல் இருக்குமிடத்து குறித்த அலுவலர் சார்பில் அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

7.2.3 பதிவுசெய்யப்பட்ட பொது சுகாதார பரிசோதகர் தொழிற்சங்கத்தின் தாய்சங்கத்தின் உறுப்பினர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படவேண்டியிருப்பின் உரிய தொழிற் சங்கத்தின் பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன் பிரிவு 7.5 இன் பிரகாரம் உரிய இடமாற்ற சபைக்கு அறியத்தருதல் வேண்டும்.

08. இடமாற்றக்கொள்கையின் கீழ் இடமாற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான கால அட்டவணை.

அட்டவணை 01

| | |
|---|---|
| யூன் 1 இற்கு முன்னர் | இடமாற்ற சபைகளை அமைத்தல் வேண்டும் |
| யூன் 15 இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக்கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் தயாரித்தல் வேண்டும். |
| யூன் 30 இற்கு முன்னர் | மாகாண அரச சேவை அலுவலர்களிடமிருந்து வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களை கோரல் வேண்டும். |
| யூலை 31இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்றங்களிற்கான விண்ணப்பங்களின் முடிவுத்திகதி ஆகும் |
| ஆகஸ்ட் 10 இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்றங்களிற்கான விண்ணப்பங்களினை அட்டவணைப்படுத்தி இடமாற்றசபையிடம் கையளித்தல் வேண்டும். |
| செப்டம்பர் 10 இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற சபையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களை அலுவலர்களுக்கு அறியப்படுத்துதல் வேண்டும்.<br>இடமாற்றம் பற்றிய தீர்மானங்களை மாகாணசபைக்குரிய www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். |
| செப்டம்பர் 15 இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற மீளாய்வுக்குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும். |
| செப்டம்பர் 30 இற்கு முன்னர் | உத்தியோகத்தர்கள் மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| ஒக்ரோபர் 15 இற்கு முன்னர் | மேன்முறையீட்டு இடமாற்ற சபையின் இறுதித் தீர்மானங்கள் வெளியிடப்படல் வேண்டும். |
| நவம்பர் 01இற்கு முன்னர் | வருடாந்த இடமாற்றல் கட்டளைகளை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| அடுத்த வருடம் ஜனவரி 1இல் | வருடாந்த இடமாற்றங்கள் செயல்வலுப்பெறுபவையாக இருத்தல் வேண்டும். |

கௌரவ ஆளுநரின் அனுமதிக்காக தயவுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

செயலாளர்

சுகாதார அமைச்சு

வட மாகாணம்

அனுமதிக்கப்படுகின்றது / ~~அனுமதிக்கப்பட~~வில்லை

கௌரவ ஆளுநர்

ஆளுநர் செயலகம்

வட மாகாணம்.

20/03/2021

பீ.எஸ்.எம்.சார்ள்ஸ்
ஆளுநர்
வட மாகாணம்